*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 2
May -2021

# ஓலைச்சுவடிகளும் உ.வே.சா.வின் பதிப்புப்பணியும்

அமுதவல்லி, ம.ந.
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை.
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.

**Corresponding author: amuthavalli@vvvcollege.org**

## ஆய்வுச்சுருக்கம்

ஆதித்தமிழன் தனது கருத்தைத் தெரிவிக்க, எழுதப் பயன்படுத்திய பொருள்களுள் ஒன்று ஓலைச்சுவடி ஆகும். ஓலைச்சுவடிகள் பழந்தமிழரின் தகவல் களஞ்சியமாக, வாழ்வியல் கருவூலமாகத் திகழ்கின்றன. பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பெருமையையும் பறைசாற்றி நிற்பவையாக விளங்குகின்றன. உலக அரங்கில் தமிழனின் பெருமையைத் தலைநிமிரச் செய்வதற்கு உதவுகின்றன. மேலை நாட்டினரும் விரும்பும் கலைப்பொக்கிஷங்களாக உள்ளன. இத்தகைய ஓலைச்சுவடிகள் குறித்தும், ஓலைச்சுவடிகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியப் படைப்புகளை அச்சுப்பதிப்பு செய்வதற்கு முழுமுதற் காரணமாக விளங்கிய உ.வே.சா.வின் பதிப்புப் பணிகள் குறித்தும் விளக்குவதே இவ்வாய்வின் சாராம்சமாகும்.

**குறிப்புச்சொற்கள் : குறியீட்டுவடிவம், எழுத்துவரிவடிவம், ஓலைவாருதல், மையாடல், எழுத்தாணி**

## முன்னுரை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அதாவது மனிதன் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்த காலத்தில், அவன் தொடக்கத்தில் தனது கருத்துக்களை வெளியிட ஒலிக்குறிப்புச் சொற்களை மட்டுமே பயன்படுத்தினான். அதன் பின்பு கூட்டமாக வாழ ஆரம்பித்த மனிதர்கள் தங்களிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்தப் பேச்சு மொழியை உண்டாக்கினர். வேட்டைக்காலச் சமூகத்தில் மனிதர்கள் தங்கள் எண்ணங்களைச் சித்திரமாக வரைய ஆரம்பித்தனர். அதாவது கிறுக்கல்

வடிவமாக வரைந்தனர். இயற்கையான இலைகள், காய்கள், பழங்கள் ஆகியவற்றின் ஈரத்தன்மையைப் பயன்படுத்தி பாறைகளிலும், குகைகளிலும் வரைந்தனர். சிறிது காலஞ் சென்ற பின்பு தங்களது சிந்தனைகளில் தோன்றிய எண்ணங்களைக் குறியீட்டு வடிவத்தில் வெளிப்படுத்தினர். மொழியின் வரிவடிவம் தோன்றிய பின்பு அவர்கள் எழுதுவதற்குப் பயன்படுத்திய பொருள்களுள் ஒன்று தான் ஓலைச்சுவடியாகும். 2500 ஆண்டு காலத் தமிழ் வரலாற்றுச் சமூகம் எழுத்து வரிவடிவங்களில் சந்தித்த மாற்றங்கள் எண்ணற்றவையாகும். இத்தகைய எண்ணற்ற பல எழுத்து வரிவடிவங்களைத் தாங்கி, பல தகவல்களைச் சுமந்து ஆதித் தமிழனின் பண்பட்ட கலை, வாழ்வியல் நிலைப்பாடுகளைச் சுமந்து வந்த பெருமைக்குரிய பெட்டகம் ஓலைச்சுவடிகளாகும். இத்தகைய ஓலைச்சுவடிகளின் தன்மைகள் பற்றியும், அவற்றை அச்சேற்றம் செய்ய உ.வே.சா.வின் செய்த அயராத முயற்சிகள் பற்றியும் இக்கட்டுரை விளக்க முயலுகின்றது.

**ஓலைச்சுவடிகளை உருவாக்குதல்**

ஓலைச்சுவடிகள் பனைமர ஓலைகளால் உருவாக்கப் படுகின்றன. தாளைப்பனை, கூந்தல் பனை, இலாந்தர்பனை ஆகிய பனை மரங்களின் ஓலைகள் ஓலைச்சுவடிகள் செய்யப் பயன்படுத்தப்பட்டன. இவ்வகைப் பனைமரங்களின் குருத்து ஓலைகளை எடுத்து நறுக்கி நன்கு பதப்படுத்தினர். அதற்கு ஓலைவாருதல் என்று பெயர்[1]. அதன் பின்பு அதில் எழுத்தாணியைக் கொண்டு எழுதினர். எழுதுவதற்குத் தயார் செய்யப்பட்ட ஓலைகள் இளம் பழுப்பு நிறத்தில் காணப்படும். ஓலையில் எழுதி முடித்த பின்பு அதனை வரிசை முறைப்படி அடுக்கி, அந்தக் கட்டின் மேலும் கீழும் ஓலையின் அளவை விடச் சற்று பெரிய மரத்தாலான பலகைகள் கொண்டு பாதுகாப்பு உறை போல கட்டினா். சிறிய நூல் நுழையும் அளவு துளையிடப்பட்டு, ஒட்டு மொத்தமாகக் கட்டுவர். ஓலைச்சுவடிகள் காலப் போக்கில் வறட்சியடையும் சூழலில் அதன் மீது எண்ணெய் தடவி அதனைப் பாதுகாத்தனர்.

ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட எழுத்து சரியாகத் தெரிவதற்காக ஓலையின் மீது மஞ்சள் அரைத்துப் பூசினர். வசம்பு, மணத்தக்காளி இலைச்சாறு, கோவை இலைச்சாறு, மாவிலைக்கரி, அருகம்புல்கரி, விளக்குக்கரி போன்றவற்றைப் பூசி எழுத்துக்களை வாசித்தனர். இதற்கு மையாடல் என்று பெயர்[2]. இச்செயலைத் தமிழ்விடுதூது,

> **“மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்**
> **மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்”[3]**

என்று குறிப்பிடுகின்றது. இம்மையாடலினால் ஓலையில் உள்ள எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதோடு, கண்ணிற்குக் குளிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. இதனால் ஓலைகள் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கப் படுகின்றன.

## ஓலைச்சுவடிகளின் பயன்பாடு

ஓலைச்சுவடிகளில் எழுதும் பழக்கம் பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. உலகளவில் பார்க்கும் போது கி.மு.5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.19ஆம் நூற்றாண்டு வரை ஓலைச்சுவடிகளில் எழுதி வந்துள்ளனர். இந்தியா, நேபாளம், மியான்மர், தாய்லாந்து, கம்போடியா, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஓலைச்சுவடிகளின் பயன்பாடு அதிகம் இருந்துள்ளது.

பெரும்பாலான ஓலைச்சுவடிகள் இலக்கியம். கட்டிடக்கலை, கணிதம், வானியல், சோதிடம் மற்றும் மருத்துவம் குறித்தவையாக அமைந்துள்ளன. ஓலைச்சுவடிகளின் ஆயுட்காலம் குறைந்தபட்சம் 200 ஆண்டுகள், அதிகபட்சம் 300 ஆண்டுகளாகும். ஆகையால் ஓலைச் சுவடிகள் பாதிப்பிற்கு உள்ளாகும் சூழலில் அதில் உள்ள பாடல்களும் கருத்துக்களும் தகவல்களும் மற்றொரு ஓலைச்சுவடியில் மாற்றி எழுதப்பட்டு வந்துள்ளன.

## எழுத்தாணி

ஓலையில் எழுதப் பயன் படுத்தப்படும் எழுத்தாணியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எழுத்தாணி என்ற சொல்லை முதன்முதலில் ஏலாதி என்ற நூல் குறிப்பிடுகின்றது.

**“ஊணோடு கூறை எழுத்தாணி புத்தகம்”[4]**

என்று கூறுகிறது. சுவடிகளில் எழுதப் பல வகையான எழுத்தாணிகள் பயன்பாட்டில் இருந்தன. ‘அவை அலகெழுத்தாணி, குண்டெழுத்தாணி, கணையெழுத்தாணி.மடிப்பெழுத்தாணி, மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி[5], என்று அழைக்கப்பட்டன.

## ஓலைச்சுவடிகளின் வகைகள்

ஓலையில் எழுதப்பட்டிருக்கும் செய்திகளுக்கு ஏற்ப அதனுடைய பெயர்கள் பல வகையாக அமைந்திருந்தன.

“ஓலைகள் பட்டோலை. பொன்னோலை, மந்திரஓலை, வெள்ளோலை, படியோலை என்று இலக்கியங்களிலும், அறையோலை, கையோலை, சபையோலை, இறையோலை, கீழ்ஓலை, தூதுஓலை, ஓலைபிடிபாடு என்று கல் வெட்டுக்களிலும் பலவகைகளாகச் சொல்லப்பட்டுள்ளன”[6] என்று சு.இராசகோபால் குறிப்பிடுவார். அரசனது ஆணைகள் எழுதப்பட்ட ஓலை திருமந்திர ஓலை என்று அழைக்கப்பட்டது. இதை

எழுதுவதற்காக அரசவைகளில் ஓலை நாயகம் என்பவர் இருந்தார். தமிழகத்திலுள்ள கோயில் செய்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஓலை நாளோலை என்று கூறப்பட்டது. திருமணச் செய்தியைத் தெரிவிக்கும் ஓலை மணவினை ஓலை எனப்பட்டது. இதன் மூலம் திருமணச் செய்தி உற்றார் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

## உ.வே.சா.வின் பதிப்புப்பணி

உ.வே.சாமிநாதய்யர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஓலைச்சுவடிகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்கும் பணியைச் செய்தவர். தமிழுக்கே தன் வாழ்வை அர்ப்பணித்தவர். அவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றவர். கும்பகோணம் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியப் பணியாற்றியவர். அழிந்து போகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டுப் பதிப்பித்தவர். தமது அச்சுப் பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும் வளத்தையும் உலகறியச் செய்தவர். அவரது தமிழ்ப்பணி காரணமாகத் தமிழ்ச் சமூகம் அவரைத் தமிழ்த்தாத்தா என்று அன்போடு அழைக்கின்றது. ஓலைச் சுவடியில் இருந்த தொண்ணூறுக்கும் மேற்பட்ட பழந்தமிழ் இலக்கியநூல்களை அச்சேற்றியவர். அவரது முயற்சியில்லாவிடில் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, புறநானூறு போன்ற தலைசிறந்த நூல்களைத் தமிழ்ச் சமூகம் அறிய வாய்ப்பில்லை. உ.வே.சா.வின் ஓலைச் சுவடிகளில் இருந்த இலக்கிய நூல்களை அப்படியே பதிப்பிக்கும் பணியை மட்டும் செய்யவில்லை. சிதைந்து போன அடிகளையும், சொற்களையும் ஆராய்ந்து கண்டறிந்து சரியான பொருள் விளங்கும் படி எடுத்துரைத்தார். தான் பதிப்பிக்கும் நூலின் முன்னுரையில் நூலை அச்சுப் பதிப்பிக்கும் போது தனக்கு ஏற்பட்ட பலவிதமான அனுபவங்களையும் விளக்கியுள்ளார்.

1887ஆம் ஆண்டு முதன் முதலில் சீவக சிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்டார். அப்போது ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு குறித்த கருத்துக்களைத் தொகுத்து எடுத்துரைத்தார். இதனால் இதனை வாசிப்பவர்கள் நூல்கள் குறித்த முழுமையான கருத்தாக்கங்களை எளிமையாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. சீவகசிந்தாமணி நூலை உ.வே.சா. அவர்களின் பதிப்பிக்கும் போது, தான் சேகரித்த அனைத்துத் தகவல்களையும் அந்த நூலில் வெளியிட்டுள்ளார். இவ்வாறு நூலைப் பதிப்பிக்கும் போது அனைத்து

விவரங்களையும் சேர்த்தே தந்திருப்பது அவர் பதிப்பித்த நூல்களின் தனிச்சிறப்புக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன. மணிமேகலை நூலுக்கு இவர் எழுதிய உரை அனைவராலும் பாராட்டப்படுகிறது. உ.வே.சா. அவர்கள் மிகவும் நினைவாற்றல் திறம் வாய்ந்தவர். அவர் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது எந்தெந்த அடிகளைக் காணோம் என்பதைத் தனது நினைவாற்றலில் பதித்து வைத்திருந்தார். இது அவரது பதிப்புப் பணிக்கு மிகவும் உதவியாக இருந்ததிருக்கின்றது.

உ.வே.சாவின் பதிப்புப் பணி மிகவும் கடினமானதாக இருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட முடியும். உ.வே.சா.வின் 1889ஆம் ஆண்டு பத்துப்பாட்டினைப் பதிப்பிக்கும் பணியை மேற்கொண்ட போது குறிஞ்சிப்பாட்டில் 99 மலர்களின் பெயர்கள் வருமிடத்தில் ஒரு சில வரிகளைக் காணவில்லை. அந்த வரிகள் இடம் பெறுமிடம் காலியாக இருந்ததால் அவரது பதிப்புப் பணி மிகவும் கடினமாக இருந்தது. பழைய ஓலைச் சுவடிகளைத் தேடி அலைந்தார் கண்டறிய இயலவில்லை. தருமபுர ஆதீனத்தில் போய் தேடலாம் என்று எண்ணினார். உ.வே.சா.வின் திருவாவடுதுறை மடத்தைச் சேர்ந்தவர். தருமபுர ஆதீனத்திற்கும் இவர் சார்ந்திருந்த திருவாவடுதுறை மடத்திற்கும் இருந்த தீராத பகையினால் பிரச்சினை நீதிமன்றம் வரையிலும் சென்று விட்டது. இருந்தாலும் தமிழ் மொழிக்காகத் தருமபுர ஆதீனத்திற்குச் சென்று உ.வே.சா. அவர்கள் உதவி கேட்டார். தருமபுர ஆதீனத் தலைவர் மாணிக்கவாசகர் மறுநாள் வரும்படி கூறினார்.

உ.வே.சா. அவர்கள் மறுநாளும் சென்றார். அவர்கள் அனுமதி கிடைத்தவுடன் தேடல் பணியைத் தொடங்கினார்[7]. அங்கே ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகள் உரையோடு காணப்பட்டன இருந்தாலும் உ.வே.சா. அவர்கள் கவனமெல்லாம் விடுபட்ட மலர்களின் பெயர்களைக் கண்டறிய வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டே அமைந்திருந்தது, காலையில் ஆரம்பித்த தேடுதல் பணியானது இரவு பத்து மணியாகியும் நிறைவடையவில்லை. உ.வே.சா. அவர்கள் அங்கிருந்த மடத்து ஊழியரிடம் தனக்கு வேண்டிய சுவடி கிடைக்காத நிலையை வருத்தத்துடன் தெரிவித்தார். உடனே அவர், “ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கன்று காவிரியில் கொண்டு போய் விடுவதற்காகச் சில சுவடிகளை தேரில் வைத்துக் கொண்டு போனார்கள்.

அதில் ஒரு சிலவற்றைக் கட்டி வைத்திருக்கிறேன். அதில் ஏதாவது இருக்கிறதா என்று பார்ப்போம் என்று கூறிவிட்டு அச்சுவடிகளை எடுத்து வந்தார். அந்தச் சுவடிகளில் தான் உ.வே.சா.வின் தேடிய குறிஞ்சிப் பாட்டின் விடுபட்ட மலர்களின் பெயர்களைக் கொண்ட பாடல் வரிகள் இருந்தன. உ.வே.சா. அவர்கள் மிகவும் மனமகிழ்ச்சி அடைந்தார். இப்போது குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிடும் 99 மலர்களின் பெயர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் தெரிந்து கொள்வதற்கு முழு முதற்காரணம் டாக்டர் உ.வே.சா. அவர்களே.

உ.வே.சா.வின் பதிப்பித்த நூல்கள் “சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள், 2 இரட்டைமணிமாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை மற்றும் சிற்றிலக்கியங்கள்4”[8] போன்றவையாகும்.

## உ.வே.சா. அவர்களின் அயராத தமிழ்ப்பணி

உ.வே.சா. அவர்கள் நூல்களை அச்சேற்றுவதற்கு முன்பு அந்நூலின் நகல்களைச் சேகரித்து அவற்றோடு ஒப்பு நோக்கி, அதில் பாட வேறுபாடு இருந்தால் எது சரியானது என்று ஆராய்ந்து அறிந்து சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்தார். அதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள் சொல்லில் விளக்க முடியாதவை. அல்லும் பகலும் அயராது தமிழ்ப் பணியாற்றினார். ஓலைச்சுவடிகளின் பிரதிகளைத் தேடித் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் சென்றார்.

ஓலைச் சுவடிகளைத் தேடித் தான் அலைந்த நிகழ்வுகளைத் தனது ‘என் சரித்திரம்’ என்ற நூலின் பல இடங்களிலும் நினைவுபடுத்திப் பார்க்கின்றார். வாகன வசதி இல்லாத காலக் கட்டத்திலும் கூட பல மைல்கள் நடந்து சென்று பல ஊர்களுக்குச் சென்று ஓலைச் சுவடிகளின் இலக்கியப் பிரதிகளைக் கண்டறிந்த நிகழ்வுகளை எடுத்துரைத்துள்ளார். அவ்வாறு அவர் கடினமுயற்சி செய்து பதிப்பித்ததின் விளைவினால் தான் உலக அரங்கில் தமிழ்மொழியின் பெருமை நிலை நாட்டப்பட்டது. தமிழ்மொழி செம்மொழி அந்தஸ்து அடைவதற்கு மூல காரணமாகத் திகழ்ந்தவர்

உ.வே.சா. அவர்களே. ஏனெனில் அவர் உழைப்பு இல்லையேல் சங்கத்தமிழ் நூல்கள் இல்லை என்றே கூறலாம். சென்னைப் பல்கலைக் கழகம் 1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் தேதி உ.வே.சா.வின் தமிழ்ப்பணியைப் பாராட்டி "மகாஉபாத்தியாயர்" என்கிற பட்டம் வழங்கிக் கவுரவித்தது.

## டாக்டர். உ.வே.சா. வின் நூலகம்

சென்னை பெசன்ட் நகரில் டாக்டர்.உ.வே.சா.வின் நூலகம் அமைந்துள்ளது. அங்கு ஏராளமான ஓலைச்சுவடிகளும் நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும் அங்கு பல தலபுராணங்களும், பக்தி இலக்கியங்களும், ஓலைச்சுவடிகளில் காணப்படுகின்றன. இவற்றைப் பதிப்பிக்கும் பணியை இந்நூலகத்தார் செய்து வருகின்றனர். சான்றாக: "திருச்செங்கோட்டுக் குறவஞ்சி" என்னும் நூல் 2002ஆம் ஆண்டு அச்சேற்றம் செய்யப்பட்டது. 2003ஆம் ஆண்டு "கற்பகவல்லி நாயகி" என்ற நூல் பதிப்பிக்கப்பட்டது.

## முடிவுரை

ஓலைச் சுவடிகள் பழந் தமிழர்களின் அறிவுப் பெட்டகமாகவும் தகவல் களஞ்சியமாகவும் விளங்குகின்றன. இதனைப் பாதுகாப்பது தமிழர்களின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். தமிழகத்தில் பல நூலகங்கள் இப்பணியைச் செய்து வருகின்றன. ஓலைச்சுவடிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த வெளிநாட்டினரும் தமிழ்நாட்டிலிருந்து சுவடிகளை எடுத்துச் சென்று அவர்களது நூலகத்தில் பாதுகாத்து வருகின்றனர். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஓலைச் சுவடிகளைக் கண்டறிந்து, குறிப்பாக இலக்கிய ஓலைச் சுவடிகளை அச்சுப்பதிப்பில் கொண்டு வர அயராது பாடுபட்ட உ.வே.சா.வின் தமிழ்ப் பணியின் பெருமை தமிழ்மொழி உள்ளவரை வாழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## அடிக்குறிப்புக்கள்

1. திருமதி.செல்லையா யோகரத் தினம், தமிழ் ஓலைச் சுவடிகள், www.tamilauthors.com
2. திருமதி.செல்லையா யோகரத் தினம், தமிழ் ஓலைச்சுவடிகள், www.tamilauthors.com
3. மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடு தூது, கண்ணி-25
4. கணிமேதாவியார், ஏலாதி, பா.எண்.63
5. சு.இராஜகோபால், சுவடிச்சுடர், பா.எண்.456
6. உ.வே.சா. - உ.வே.சா.வின் அனுபவக் கட்டுரை. உதிர்ந்த மலர்கள் – https://tamilbharathan.blogspot.com/2018/12/blog-post.html?m=1

7. உ.வே.சா. அச்சுப்பதித்த நூல்களின் பட்டியல், ta.m.wikipedia.org
8. https://ta.m.wikipedia.org/wiki/ எழுத்தாணி